Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, JANUARY 19, 2024

வெள்ளிக்கிழமை ஜனவரி 19, 2024 | ஒளி: 10 கதிர்: 175 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

## “வற் சான்றிதழை காட்சிப்படுத்தவும்”

வருடாந்தம் 80 மில்லியன் ரூபாய் இலாபமீட்டும் ஒவ்வொரு வியாபார நிலையங்களும் அல்லது தொழிற்துறையும் பெறுமதி சேர் வரியில் (வற்) பதிவு செய்யப்பட வேண்டும். மேலும் அனைவரும் பார்க்கும் வகையில் வற் பதிவு சான்றிதழ் காட்சிப்படுத்தப்பட வேண்டும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

### சிறுமி துஷ்பிரயோகம்:

## பூசகருக்கு கடூழிய சிறை

■ யது பாஸ்கரன்

சிறுமியை பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தினார் என குற்றஞ்சாட்டப்பட்ட பூசகரை எட்டு வருடங்களுக்கு பின்னர் குற்றவாளியாக இனங்கண்ட கிளிநொச்சி மேல் நீதிமன்றம், குற்றவாளிக்கு 12 ஆண்டுகால கடூழிய சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

தொடர்ச்சி P2

### மரக்கறிகளின் விலைகள்

# “ஏப்ரல் வரை குறையாது”

**காலநிலை மாற்றம் காரணமாகவே மரக்கறி பயிர்செய்கைக்கு பாதிப்பு**

**மரக்கறிகளின் விலை உயர்வு தொடர்பில் யாரும் குழப்பமடைய தேவையில்லை**





■ ஆ.ரமேஸ், டி.சந்ரு, செ.திவாகரன்

கமத்தொழில் அமைச்சுக்கு கீழ் இயங்கும் நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்திலிருந்து வெளியிடங்களில் உள்ள சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மரக்கறிகளின் அளவு நாளுக்கு நாள் குறைவடைந்து வருகிறது என தெரிவித்த நுவரெலியா பொருளாதார மத்திய நிலைய சங்க தலைவர் அருணசாந்த ஹெட்டியாராச்சி, நுவரெலியாவில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி வகைகளுக்கு எதிர்வரும் ஏப்பிரல் மாதம் கடைசி வரை தட்டுப்பாடுகள் நிலவும் என்றார்.

மரக்கறிகளின் விலைகள், ஏற்றுமதி மற்றும் பற்றாக்குறை உள்ளிட்ட விடயம் தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பு நுவரெலியா பொருளாதார மத்திய சங்க அலுவலகத்தில் வியாழக்கிழமை (18) நடைபெற்றது.

தொடர்ச்சி P2

## “பழைய சட்டத்தை மீள அமுல்படுத்த வேண்டும்



ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளை கொண்ட தாய்மார்கள் வெளிநாட்டு வேலைக்கு செல்வதைத் தடுக்கும் விதிமுறைகளை மீண்டும் கொண்டு வர வேண்டும் என்று பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்தார்.

அத்துடன், “சிறு குழந்தைகளை கொண்ட பெண்களை வேலைக்காக புலம்பெயர்வதற்கு அனுமதிக்கும் தற்போதைய விதிமுறைகள் குழந்தைகளுக்கு அநீதியானது என்றும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



## “ஜனாதிபதியாக பதவியேற்றார் அனுர

தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க, சமூக வலைத்தளங்களின் ஊடாகவே நாட்டின் ஜனாதிபதியாக பதவியேற்று விட்டார் என குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## பராமரிப்பு மையத்துக்கு தேசிய கொள்கை

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் தயாரிக்கப்பட்ட சிறுவர்களுக்கான பகல் நேரப் பராமரிப்பு மைய வசதிகள் பற்றிய தேசியக் கொள்கை தொடர்பில் சிறுவர்கள், பெண்கள் மற்றும் பாலினம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் விரிவாகக் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தக் குழு பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி தலதா அத்துகோரல தலைமையில் பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (09) கூடிய போதே இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

தொடர்ச்சி P2



## மாவீரர் துயிலும் இல்லம் சுவீகரிப்பு தடுத்து நிறுத்தம்

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் அளம்பில் மாவீரர் துயிலும் இல்ல காணியை தனிநபரிடமிருந்து இராணுவத்துக்கு சுவீகரிப்பதற்கான நில அளவீட்டு பணி வியாழக்கிழமை (18) இடம்பெறவிருந்த நிலையில், குறித்த அளவீட்டு பணிகள் பொதுமக்களால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

## குருந்தூர் மலையில் இரகசிய பேச்சு

■ சண்முகம் தவசீலன்

இன மத நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாக தெரிவித்து குருந்தூர்மலை ஆலயம் சார்ந்தவர்கள் என கூறிக்கொள்ளும் சிலருக்கும், பௌத்தமத குருமார்களுக்கும் இடையில் குருந்தூர் மலையில் இரகசிய கலந்துரையாடல் ஒன்று அண்மையில் இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2





## ஜனாதிபதிகள் சந்திப்பு

சுவிட்ஸர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்ற உலகப் பொருளாதார மாநாட்டுடன் இணைந்ததாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் சிங்கப்பூர் ஜனாதிபதி தர்மன் சண்முகரத்தினத்துக்கும் (Tharman Shanmugaratnam) இடையிலான சந்திப்பு புதன்கிழமை (17) நடைபெற்றது.

## சர்வதேச மாநாடுகளில் உரையாற்ற உகண்டா பயணமானார் ஜனாதிபதி

அணிசேரா நாடுகளின் மாநாட்டின் (NAM) 19ஆவது அரச தலைவர்கள் மாநாடு மற்றும் G77 மற்றும் சீனாவின் 3ஆவது தென் மாநாடு என்பவற்றில் (3rd South Summit of the Group of 77 & China) பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உகண்டாவுக்குகான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

உகண்டா குடியரசு ஜனாதிபதி யொவேரி முசேவெனியின் (Yowri Museveni) அழைப்பின் பேரிலேயே ஜனாதிபதி இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## தணிக்கை சபை ரத்து

பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரம் மற்றும் ஆக்கப்பூர்வ உரிமைகளைப் பாதுகாப்பதை அடிப்படையாகக் கொண்டு பொது அரங்கக்கலை வகைப்படுத்தல் சட்ட வரைவு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் குழுவினால் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவிடம் கையளிக்கப்பட்டது.

இந்த புதிய வரைவைத் தயாரிப்பதற்காகத் தணிக்கை சபையின் முன்னாள் தலைவர் சமன் அதாவுதஹெட்டி தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவில் திரைப்படவியலாளர் அசோக ஹாதகம, நாடகக் கலைஞர் ராஜித திஸாநாயக்க, படைப்பாளர் அனோமா ராஜகருணா மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி ஜகத் விக்கிரமநாயக்க ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

தொடர்ச்சி P2



### சிறுவன் மர்ம மரணம்:

## மேற்பார்வையாளருக்கு மீண்டும் விளக்கமறியல்



■ பாறுக் ஷிஹான்

நன்னடத்தை பாடசாலையில் உயிரிழந்த சிறுவனின் மரணம் தொடர்பில் கைதான அப்பாடசாலையின் மேற்பார்வையாளரான பெண்ணை மீண்டும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறும் அது தொடர்பான வழக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் 31ஆம் திகதி வரை மறு விசாரணைக்காக ஒத்தி வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## 12 போலிகள் சிக்கின; சாரதியும் கைதானார்



மஸ்கெலிய நல்லத் தண்ணிநகரில் 11,500 ரூபாய் மதிப்புள்ள போலி நாணயத்தாள்களை வைத்திருந்த வாடகை வேன் சாரதி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக நல்லத்தண்ணி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## மூன்றாவது கண்ணின் ஊடாக தண்டம்



கொழும்பு நகர எல்லைக்குள் பொருத்தப்பட்டுள்ள CCTV கமரா அமைப்புகளின் ஊடாக சாரதிகளுக்கு தண்டப்பணம் வழங்கும் முறை எதிர்வரும் 22ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படவுள்ளதாக பதில் பொலிஸ் மா அதிபர் தேஷ்பந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து காவல்துறை அதிகாரிகள் கண்காணித்து போக்குவரத்து விதிமீறல்களை கண்டறிவதை விட இந்த முறை 300 மடங்கு திறன் வாய்ந்தது என பதில் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## சிறுமி துஷ்பிரயோகம்: பூசகருக்கு கடூழிய சிறை

கிளிநொச்சி பளைப் பகுதியில் கடந்த 2016 ஆம் ஆண்டு ஜூலை முதலாம் திகதி அல்லது அதற்கு அண்மித்த நாளொன்றில் தனக்கு உறவு முறையான பதினாறு வயதுக்கும் குறைந்த சிறுமி ஒருவரை பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தினார் என்றக் குற்றச்சாட்டில் பூசகர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேநபரான பூசகருக்கு எதிராகக் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. விசாரணைகளின் பின்னர் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் கிளிநொச்சி மேல் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கின் தீர்ப்பு, கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.எம்.ஏ.சகாப்தீனால் வியாழக்கிழமை (18) வழங்கப்பட்டது.

எதிரியின் சார்பாக சட்டத்தரணி பி.அருச்சுனா, சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் அரச சட்டவாதி என்.என்.அர்ஜுனகுமார் மன்றில் ஆஜராகியிருந்தனர்.

இவ்வழக்கின் எதிரி, சமூகத்துக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டியவர். தனது மனைவியின் பாதுகாப்புக்காகச் சிறுமியின் பெற்றோரின் சம்மதத்துடன் குறித்த சிறுமியைத் தனது வீட்டில் வைத்திருந்துள்ளனர். இதன்போதே பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கியிருக்கின்றார்.

வட மாகாணத்திலே பதினாறு வயதிற்குக் குறைவான சிறுவர்கள் பாலியல் ரீதியில் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்பட்டாலும் ஒரு சில சம்பவங்களுக்கு மாத்திரமே பொலிஸாரால் வழக்குப் பதிவு செய்யப்பட்டு இவ்வாறு மேல் நீதிமன்றம் வரைக்கும் கொண்டுவரப்படுகின்றது. ஆகையால், மேற்படி விடயங்களைக் கவனத்தில் கொண்டு குற்றவாளிக்குத் தகுந்த தீர்ப்பளிக்குமாறு அரச சட்டவாதி என்.என்.அர்ஜுனகுமார் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

மேற்படி விடயங்களைக் கவனத்தில் கொண்ட நீதிபதி, குற்றவாளிக்கு 12 ஆண்டுகால கடூழிய சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளதுடன் பத்தாயிரம் ரூபாய் தண்டப்பணமும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு இரண்டு இலட்சம் ரூபாய் நட்டஈடும் செலுத்துமாறும் தீர்ப்பளித்தார்.

## “ஏப்ரல் வரை குறையாது”

இதில் கலந்துகொண்டு விளக்கமளித்த சங்கத் தலைவர் மேலும் தெரிவித்ததாவது.

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக பெய்துகொண்டிருந்த மழையுடன் கூடிய காலநிலை மாற்றம் காரணமாகவே மரக்கறி பயிர்ச்செய்கைக்கு பாரிய பாதிப்புக்கள் ஏற்பட்டன.

இதன் காரணமாக விவசாயிகள் சரியான நேரத்தில் காலத்திற்கு ஏற்ப பயிர்களைப் பயிரிட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

இதன் விளைவுதான் இன்று நுவரெலியாவில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறிகளுக்கு வரலாறு காணாத அதி உச்ச விலை ஏற்பட்டுள்ளது.

ஆகையால் மரக்கறிகளின் விலை உயர்வு தொடர்பில் யாரும் குழப்பமடையத் தேவையில்லை.

அதேநேரத்தில் நுவரெலியாவில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி வகைகளில் கரட்டுக்கு அதிக தட்டுப்பாடு நிலவுவதால் விலை உயர்வு ஏற்பட்டுள்ளது.

இருப்பினும் வியாழக்கிழமை (18) ஒரு கிலோ கிராம் கரட்டின் கொள்வனவு விலை 1550/=ரூபாய் தொடக்கம் 1650/=ரூபாய் என விலையிடப்பட்டுள்ள போதிலும் பட்டியலிடப்பட்ட விலைக்கு அதிகமாக விவசாயிகளிடம் கொள்வனவு செய்யப்படுவதாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்றார்.

மேலும் லீக்ஸ்,கோவா,பீட்ரூட், மற்றும் நாட்டு மரக்கறிகளான போஞ்சு,கறிமிளகாய்,கத்தரிக்காய் போன்ற பல மரக்கறிகளுக்கும் தட்டுப்பாடுகள் நிலவுவதாகத் தெரிவித்த அவர் இந்த விலை உயர்வு ஏப்ரல் மாதம் கடைசி வரை தொடரக்கூடும் என அச்சம் தெரிவித்தார்.

அதேநேரத்தில், தம்புள்ள, பூகொடை, கொழும்பு மெனிங் சந்தை உள்ளிட்ட வெளிமாவட்ட சந்தைகளின் வர்த்தகர்கள் மரக்கறிகளுக்கான விலையைத் தினமும் காலை வேளையில் அனுப்பியதன் பின் நுவரெலியா மத்திய சந்தையில் அன்றைய நாளுக்கான விலைப் பட்டியல் காட்சிப்படுத்தப்படுகிறது.

ஆனாலும், விவசாயிகளின் மரக்கறி தோட்டங்களுக்குச் செல்லும் செல்லும் கொள்வனவாளர்கள், விவசாயிகள் கூறும் அதிக விலைக்கே மரக்கறிகளைக் கொள்வனவு செய்து சந்தைகளுக்குக் கொண்டு சென்று அதை அதிக விலைகளுக்கு நுகர்வோர்களுக்கு விற்பனை செய்கின்றனர்.

ஆனால், நுவரெலியா பொருளாதார மத்திய சந்தையில் சாதாரண கொள்வனவு விலையை நாம் காட்சிப்படுத்துகிறோம் இதைப் பின்பற்ற முடியாத அளவுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்திலிருந்து வெளியிட மாவட்ட மத்திய சந்தைகளுக்கு நாள் ஒன்றுக்கு 40 ஆயிரம் கிலோ கிராம் கரட் ஏற்றுமதி செய்யப்படும். ஆனால் (17) ஆம் திகதி வெறுமனே 7,970 கிலோ கிராம் மாத்திரமே ஏற்றுமதி செய்யப்பட்டது என்றார்.

அந்த வகையில் மரக்கறிகளுக்கான தட்டுப்பாடு நாளுக்கு நாள் உயர்வடைந்து வருவதால் விலைகளும் உயர்வடைந்து வருகின்றன. அத்துடன் மந்தியைச் சந்தையிலிருந்து வெளி மாவட்ட சந்தைகளுக்குக் கொண்டு செல்லும் மரக்கறிகளின் அளவும் குறைகிறது.

இதன் காரணமாக மரக்கறி கொள்வனவு,பொதியிடல்,

லொறிகளுக்கு ஏற்றுதல் போன்ற தொழிலில் நாட்கூலிக்குத் தொழில் செய்யும் தொழிலாளர்களும் தொழில் ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் குடும்ப பொருளாதாரத்தை ஈடுசெய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அதேபோல மரக்கறிகள் தட்டுப்பாடு, விலை உயர்வு காரணமாக நுவரெலியா பொருளாதார மத்திய சந்தையில் மொத்த கொள்வனவு கடைகள் பலவும் மூடப்பட்டுள்ளன. சில்லறை விலைக்கே மரக்கறிகள் விற்பனை செய்யப்படுகின்றன. கடைகளிலும் மரக்கறிகள் இல்லை மரக்கறி தட்டுகளும் வெறிச்சோடி கிடக்கின்றன.

அதேநேரத்தில், இவ்வருடம் முதலாம் திகதி முதல் நுவரெலியாவில் ஆங்கில மரக்கறிகளின் விலை மாற்றம் பெற்று தற்போது வரலாறு காணாத விலை உயர்வு ஏற்பட்டுள்ள போதிலும் தற்போது நுவரெலியா மாவட்ட விவசாயிகள் அவர்களுடைய விவசாய தோட்டங்களில் பயிர் செய்கையை ஆரம்பித்துள்ளனர்.

இந்த நிலையில் எதிர்வரும் மே, ஜூன், ஜூலை மாதங்களில் விளைச்சல் அதிகமாகி சந்தைகளில் விற்பனை செய்ய முடியாத அளவுக்கு மரக்கறிகள் அதிகரிக்கும் என சுட்டிக்காட்டிய தலைவர் அப்போது விலையும் குறைந்து அடிமட்ட விலைக்கு மரக்கறிகளை விற்பனை செய்ய நேரிடும்.

அவ்வாறு மரக்கறிகள் அதிகரிக்கும் பட்சத்தில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிகளைச் செய்வதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ள அழுத்தம் கொடுக்கப்படும் வகையில் விவசாய கமத்தொழில் அமைச்சுடன் பேச்சு நடத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேபோல, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் இலங்கையில் உள்ள மிளகாய், மிளகு, கருவாப்பட்டை போன்ற வாசனை பொருட்களுக்குக் கேள்வியுள்ளதால் இவ்வாறான பொருட்களை உற்பத்தி செய்ய நுவரெலியா மாவட்ட மக்களுக்கு விவசாய திணைக்களம் ஊக்கமளிக்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

## “வற் சான்றிதழை காட்சிப்படுத்தவும்”

‘வற்’ செலுத்துவதற்கான வரம்பு தற்போது ரூ. 80 மில்லியன் ஆக இருந்தாலும் விரைவில் ஆண்டுக்கு 60 மில்லியன் ரூபாய் என அதைக் குறைக்கத் தேவையான சட்ட ஏற்பாடுகள் செய்யப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

யட்டியந்தோட்டையில் வியாழக்கிழமை (18) இடம்பெற்ற கூட்டமொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போது அவர் தெரிவித்தார்.

‘வற்’ பதிவு இலக்கம் காட்சிப்படுத்தப்படாவிட்டால், அவ்வாறு செய்யாதவர்களுக்கு எதிராக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு எவ்வித தடையும் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## “பழைய சட்டத்தை...

இது மிகவும் நியாயமற்றது என்று நான் நினைக்கிறேன். இரண்டு வயதுக் குழந்தைக்குப் பேசத் தெரியாது, தனியாக எதையும் செய்ய முடியாது. அவர்கள் பாதுகாப்பான கைகளில் இல்லை. எனவே, இதுபோன்ற சிறு குழந்தைகளைக் கொண்ட பெண்கள் தங்கள் குழந்தையை விட்டு வேலைக்குச் செல்ல வேண்டாம். குறைந்த பட்சம் குழந்தைக்கு ஐந்து வயது வரை காத்திருக்க வேண்டும்,” என்று குமாரசிங்க விளக்கினார்.

மேலும் அவர் “இது எனது தனிப்பட்ட கருத்து மற்றும் வயது வரம்பை மாற்றியமைக்க வேண்டும் என்று நான் கோருகிறேன்,” என்று கூறினார்.

2022 இல், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, ஒழுங்குமுறை திருத்தம் கோரி அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்தார். பெண் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான குடும்ப பின்னணி அறிக்கை (FBR) தேவையை ஓரளவு தளர்த்துவதற்கான அமைச்சரவையின் முடிவு இலங்கையிலிருந்து பெண் தொழிலாளர் குடியேற்றத்தை ஊக்குவிப்பதற்கான ஒரு சாதகமான நடவடிக்கையாக வரவேற்கப்பட்டது.

ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளைக் கொண்ட பெண்களைத் தடுக்க 2013 ஜூனில் அறிமுகப்படுத்தப்பட்ட FBR பாரபட்சமானது என்றும், தொழிலாளர்களின் ஆவணமற்ற இடப்பெயர்வை ஊக்குவிக்கிறது என்றும் கொள்கையின் விமர்சகர்கள் வாதிட்டனர். ஆரம்பத்தில், பெண் வீட்டுப் பணியாளர்களுக்கு மட்டுமே FBR பொருந்தும், ஆனால் ஒகஸ்ட் 2015இல், அனைத்து பெண் புலம்பெயர்ந்தோரையும் உள்ளடக்கியதாக நீட்டிக்கப்பட்டது.

இராஜாங்க அமைச்சர், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறாரா என்று கேட்ட பொழுது, பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சரும் ஜனாதிபதியுமான ரணிலிடம் இது குறித்துக் கலந்துரையாடவுள்ளதாகத் தெரிவித்தார்.

“ஜனாதிபதி தனது வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியதும், இந்த விவகாரத்தை நான் அவரிடம் எடுத்துரைப்பேன்” என்றும் அவர் கூறினார்.

## “ஜனாதிபதியாக பதவியேற்றார் அனுர

ஐக்கிய மக்கள் சக்தியின் மாநாடு பெப்ரவரி (17) கண்டியில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்த மாநாட்டிற்காக நாவலப்பிட்டி பிரதேச பெண்களை அழைக்கும் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார மேற்கண்டவாறு தெரிவித்தார். .

மேலும் அவர், சமூக ஊடகங்களின்படி, நாட்டின் பெரும்பான்மையான மக்கள், தேசிய மக்கள் சக்தியைச் சுற்றி ஒன்றுபடவில்லை, சில பகுதிகளில், தேசிய மக்கள் சக்தியைச் சுற்றி குழுவொன்று ஒன்று சேர்ந்துள்ளது.

ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவில் இருந்து விலகிய பெருமளவானோர், பிளவுபட்டு மாற்றுக் கட்சிகளுக்குச் செல்கின்றனர். இவ்வாறு பிளவுபட்ட ஒரு குழுவினர் தேசிய மக்கள் சக்தியில் இணைந்துள்ளனர்.

இந்த வருடம் செப்டெம்பர் மாதத்திற்குள் இந்த நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும், அந்தத் தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தலை நடத்துவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பொதுத் தேர்தலை நடத்தி அதிக வாக்குகளைப் பெறும் கட்சியுடன் இணைந்து ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைக்கும் திட்டம் ஜனாதிபதியிடம் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பெரும்பான்மையான மக்கள் தற்போது ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ளதாகவும், எதிர்காலத்தில் எந்தவொரு தேர்தலிலும் ஐக்கிய மக்கள் சக்தி வெற்றிபெறும் என்றும் தெரிவித்துள்ளார்

இதேவேளை இந்த விழிப்புணர்வு நிகழ்வை ஐக்கிய மக்கள் சக்தியின் நாவலப்பிட்டி தொகுதி அமைப்பாளர் சசங்க சம்பத் சஞ்சீவ ஏற்பாடு செய்திருந்தார். அதில், நாவலப்பிட்டி நகர சபையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் மாநகர சபை உறுப்பினர் திருமதி நந்தனி விக்ரமசிங்க, ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துகொண்டார்.

## மாவீரர் துயிலும்...

முல்லைத்தீவு நில அளவை திணைக்கள அதிகாரிகள் நில அளவீட்டு பணிக்காக துயிலும் இல்ல காணிக்கு சென்றபோது அங்கு கூடிய மக்கள், “இந்த இடத்தில் நாம் எமது உறவுகளை புதைத்துள்ளோம். இந்த காணியை அளவிட அனுமதிக்க மாட்டோம்” என்று கூறினர். அதனடிப்படையில் அளவீட்டு பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

குறித்த இடத்தில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் சமூக செயற்பாட்டாளர் பீற்றர் இளஞ்செழியன் மக்களுடன் இணைந்திருந்தனர்.

## குருந்தூர் மலையில்...

முல்லைத்தீவு மாவட்டத்தில் குமுழமுனை தண்ணிமுறிப்பு பகுதியில் அமைந்துள்ள குருந்தூர்மலை பகுதியில் நீதிமன்ற உத்தரவுகளை மீறி சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்ட விகாரை விவகாரம் தற்போது சர்வதேச அளவில் பேசுபொருளாக மாறியுள்ளது.

குறிப்பாக இந்த குருந்தூர்மலை பகுதியில் நீதிமன்ற உத்தரவுகளை மீறி சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்ட விகாரை விவகாரம் தொடர்பில் தீர்ப்புகளை வழங்கிய நீதிபதி ரி.சரவணராஜா, உயிர் அச்சுறுத்தல் காரணமாக பதவியை துறந்து நாட்டை விட்டு தப்பிச் சென்றுவிட்டார். குறித்த விவகாரமானது வருகிற மாதம் ஆரம்பமாகவுள்ள ஜெனீவா அமர்வுகளில் பேசப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது

இந்நிலையில் இனமத நல்லிணக்கத்தினை மேற்கொள்ளவென வடக்கு, கிழக்கு மாகாணத்திற்கு பொறுப்பாக ஜனாதிபதியால் புதிதாக நியமிக்கப்பட்ட குறித்த சியம்பலகஸ்கல விமலசார தேரர் தலைமையில், சிவசேனை அமைப்பின் வன்னி பிராந்திய இணைத்தலைவர் தமிழ்த்திரு மாதவன் உள்ளிட்ட குழுவினர் மற்றும் குருந்தூர்மலை ஆலயம் சார்ந்தவர்கள் என சிலர், பௌத்த மத குருமார்களுக்கிடையில் இனமத நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் குறித்த இரகசிய கலந்துரையாடல் இடம் பெற்றிருக்கின்றது.

## பராமரிப்பு மையத்துக்கு தேசிய கொள்கை

இந்தக் கலந்துரையாடலில் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் என்பவற்றின் அதிகாரிகளும், வெரிட்டே ஆய்வு நிறுவனத்தின் பிரதிநிதிகள் மற்றும் துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

முழு நாட்டுக்கும் பொருந்தும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்தத் தேசியக் கொள்கை தற்பொழுது மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சுக்கு சமர்பிக்கப்பட்டுள்ளதாகவும், அதனையடுத்து அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரிகள் இதன்போது தெரிவித்தனர்.

## தணிக்கை சபை ரத்து

திரைப்படம், நாடகம் மற்றும் கலை நிகழ்ச்சிகளில் ஈடுபட்டுள்ள பல்வேறு தரப்பினருடன் கலந்தாலோசித்து புதிய சர்வதேச போக்குகள் மற்றும் தரநிலைகளுக்கு ஏற்ப இந்த வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது.

தற்போது நடைமுறையில் உள்ள 1912ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பொது அரங்கேற்றக்கலை கட்டளைச் சட்டத்தினை ஆராய்ந்து இந்த புதிய சட்டத்தைச் செயல்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சட்டத்தின் ஊடாக கலைப் படைப்புகள் தொடர்பில் எழுந்துள்ள பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், இச்சட்டத்தின் மூலம் படைப்பு சுதந்திரம் முழுமையாகப் பாதுகாக்கப்படும் எனவும் குழுவின் தலைவர் சமன் அதாவுதஹெட்டி தெரிவித்துள்ளார்.

## சர்வதேச மாநாடுகளில் உரையாற்ற...

அணிசேரா நாடுகளின் மாநாட்டின் (NAM) 19ஆவது அரச தலைவர்கள் மாநாடு, “உலகளாவிய கூட்டு செழுமைக்கான ஒத்துழைப்புக்களை விரிவுபடுத்தல்” என்ற தலைப்பில் ஜனவரி 19 மற்றும் 20 ஆம் திகதிகளில் உகண்டாவின் கம்பாலா நகரில் நடைபெறவுள்ளது.

அதனையடுத்து, G77 மற்றும் சீனாவின் 3ஆவது தென் மாநாடு ஜனவரி 21- 22 ஆம் திகதி “எவரையும் கைவிடக்கூடாது” என்ற தலைப்பில் கம்பாலா நகரில் நடைபெறவுள்ளது.

மேற்படி, இரு மாநாடுகளிலும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உரையாற்ற உள்ளதோடு, ஆபிரிக்க வலயத்தில் காணப்படும் உலக தெற்கு நாடுகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ளார்.

அணிசேரா நாடுகளின் அமைப்பில் 120 நாடுகள் அங்கம் வகிப்பதோடு, பெண்டுன்க் கொள்கையை மையப்படுத்தி அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் தேவைகளை நிறைவேற்றும் நோக்குடன் செயற்பட்டு வருகிறது.

இலங்கை அணிசேரா நாடுகள் அமைப்பின் ஆரம்ப உறுப்பினர் என்பதோடு 1976-1979 அதன் தலைமைத்துவத்தையும் வகித்துள்ளது. 1976ஆம் ஆண்டில் 5ஆவது அரச தலைவர்கள் மாநாட்டை இலங்கை நடத்தியது.

G77 மற்றும் சீனாவின் 3ஆவது தெற்கு மாநாட்டில் 134 நாடுகள் அங்கம் வகிப்பதோடு, வர்த்தகம், முதலீடு, நிலையான அபிவிருத்தி, காலநிலை அனர்த்தம், வறுமை ஒழிப்பு மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம் உள்ளிட்ட விடயங்களில் ஒத்துழைப்புக்களை பலப்படுத்தும் நோக்கில் நடத்தப்படுகிறது.

## 12 போலிகள் சிக்கின; சாரதியும் கைதானார்

வலஸ்முலையைச் சேர்ந்த 45 வயதுடைய வேன் சாரதி ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டவிரோத போதைப்பொருளை ஏற்றிக்கொண்டு சிவனொளிபாதமலைக்கு வந்தவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது இந்த போலி நாணயத்தாள்கள் சிக்கின. அதனை வைத்திருந்த சாரதி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார் என நல்லத்தண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

சந்தேக நபர் வலஸ் முல்ல பிரதேசத்தில் இருந்து சிவனொளி பாதமலைக்கு யாத்ரீகர்கள் குழுவுடன் வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மேற்பார்வையாளருக்கு மீண்டும் விளக்கமறியல்

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சிறுவர் நன்னடத்தை பாடசாலையில் தங்க வைக்கப்பட்ட நிலையில் உயிரிழந்த சிறுவனின் மரணம் தொடர்பில் அப்பாடசாலையின் மேற்பார்வையாளரான பெண் சந்தேகத்தில் கல்முனை தலைமையக பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பின்னர் புதன்கிழமை(17) மீண்டும் கல்முனை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போதே மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.

குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில், மரணமடைந்த சிறுவனின் தந்தை சகோதரி ஆகியோர் நீதிமன்ற வளாகத்திற்கு வருகை தந்திருந்ததுடன் பொலிஸார் மற்றும் பிரதிவாதியின் சட்டத்தரணி ஆகியோ ரின் விண்ணப்பங்கள் ஆராயப்பட்டு 28 வயதுடைய குறித்த பாடசாலையின் மேற்பார்வையாளரான பிறின்ஸி புலேந்திரன் என்பவரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மூன்றாவது கண்ணின் ஊடாக தண்டம்

ஒரு மாகாணத்தில் இருந்து கொழும்புக்கு வந்த ஒருவர் போக்குவரத்து விதிமீறலில் சிக்கினால், பொலிஸாரால் வழங்கப்படும் ரசீது அவரது வீட்டிற்கு வரும் எனவும், அபராதம் செலுத்திய பின்னர் சாரதி அனுமதிப்பத்திரத்தை அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் பதில் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.




## நடுநிசியில் நின்ற பஸ்: பதற்றமடைந்த பயணிகள்

வி.ரி.சகாதேவராஜா

யாழ்ப்பாணத்தில் இருந்து மட்டக்களப்பு நோக்கி செவ்வாய்க்கிழமை இரவு (16) பயணித்துக்கொண்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்து, புனானை பகுதியில் வைத்து டீசல் இல்லாமல் நட்ட நடுநிசியில் நடுக்காட்டில் புதன்கிழமை (17) நின்றுவிட்டது.

அப்பகுதி யானை நடமாற்றம் அதிகமான இருக்கும் பகுதி என்பதால் பேருந்தில் பயணித்த பயணிகள் பதற்றமடைந்து பெரும் அசௌகரியத்திற்கு முகம் கொடுத்துள்ளனர்.

சிறிது நேரத்தில் அவ்வழியாக வந்த லொறியிலிருந்து 10 லீட்டர் டீசலை கடனாகப் பெற்று, வாழச்சேனை வரை வந்து வாழைச்சேனை டிப்போவில் டீசலை நிரப்பி காலை 6 மணியளவில் மட்டக்களப்பை வந்தடைந்துள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் இனிமேலும் இடம்பெறாத வகையில் கவனம் செலுத்துமாறு பயணிகள் தெரிவித்துள்ளனர்.

## கட்சியின் அலுவலகத்தை திறந்தார் கருணா அம்மான்

ரீ.எல்.ஜவ்பர்கான்

முன்னாள் பிரதி அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் முன்னாள் உப தலைவருமான விநாயகமூர்த்தி முரளீதரன் (கருணா அம்மான்) தலைமையிலான தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி கட்சியின் தலைமைச் செயலகம் மட்டக்களப்பில் வியாழக்கிழமை (18) வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு -கல்லடியில் குறித்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சங்கர், கட்சியின் சர்வதேச அமைப்பாளர் ஜெயா சரவணன், சரீரம் தலைவர் எஸ்.லோகேஸ்வரன் மற்றும் முன்னாள் மாநகர சபை உறுப்பினர்கள் உள்ளூராட்சி மன்ற முக்கியஸ்தர்கள்,கட்சியின் பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

இதன்போது, கடந்த 2018 ஆம் ஆண்டு தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி கட்சி ஆரம்பிக்கப்பட்டதாகவும் தற்போது 7 ஆண்டு நிறைவில் நமது கட்சி செயற்பட்டு கொண்டிருப்பதாகவும் கடந்த பாராளுமன்ற தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் குறித்த கட்சியூடாக போட்டியிட்டு முப்பதாயிரத்துக்கும் அதிகமான வாக்குகளை பெற்றதாகவும் அங்கு உரையாற்றிய கட்சிகளின் தலைவர் விநாயகமூர்த்தி முரளிதரன் குறிப்பிட்டுள்ளார்.






### இலங்கையின் எரிசக்தித்துறை அபிவிருத்திக்கு

## "முதலீடு செய்ய இந்தியா தயார்"

இலங்கைக்கான இந்தியாவின் புதிய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிமை (16) சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் பாராளுமன்ற பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்னவும் பங்கேற்றிருந்தார்.

இந்தச் சந்திப்பில் புதிய உயர்ஸ்தானிகருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்த சபாநாயகர், இலங்கை இக்கட்டான சூழலை எதிர்கொண்டிருந்தபோது இந்தியா வழங்கிய அனைத்துவிதமான உதவிகள் குறித்து நன்றி தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் இலங்கையில் தான் பணியாற்றிய நினைவுகளை மீட்ட இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, முன்பிருந்த நிலைமையில் பாரிய மாற்றங்களை அவதானிக்கக்கூடியதாக உள்ளது என்றும் இரு நாடுகளுக்கும் இடையில் காணப்படும் ஐக்கியத்தை மேம்படுத்த இந்தியா விரும்புவதாகவும், இலங்கைக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கு இந்தியா தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இலங்கையின் எரிசக்தித்துறையின் அபிவிருத்தியில் முதலீடுகளைச் செய்வதற்கு இந்தியா தயாராக இருப்பதாகவும், இதில் ஏற்படக்கூடிய முன்னேற்றத்தின் விளைவாக இரு நாடுகளுக்கும் நன்மை கிடைக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும், டிஜிட்டல் துறையில் இலங்கையை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியா ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என சபாநாயகர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இலங்கை ஜனநாயக ரீதியில் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்துக் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்ட சபாநாயகர், துறைசார் மேற்பார்வைக் குழுக்களில் இளைஞர்களின் பங்களிப்பை அதிகரித்திருப்பதற்கு எடுத்திருக்கும் முயற்சிகள் பற்றி விளக்கமளித்தார்.

இரு நாட்டுப் பாராளுமன்றங்களுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவது, பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற பணியாளர்களுக்கான பரிமாற்றத் திட்டங்களை அதிகரிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இந்திய உயர்ஸ்தானிகர் இங்கு உறுதியளித்துள்ளார்.

## பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

க.அகரன்




வவுனியா பல்கலைக்கழகத்தின் கல்வி சாரா ஊழியர்கள் பல்கலைக்கழக வாயிலில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை வியாழக்கிழமை (18) முன்னெடுத்துள்ளனர்.

"கல்வி சாரா ஊழியர்களின் சம்பள உயர்வை அதிகரிக்க வேண்டும்", "தற்போதைய பொருளாதார நிலைமையில் வாழ்க்கைச் செலவுக்கேற்ற கொடுப்பனவை வழங்க வேண்டும்", என்ற சுலோகங்கள் எழுதப்பட்ட என்ற பதாதைகள் ஏந்தி இருந்ததோடு இவ்வார்ப்பாட்டத்துக்கு அரசாங்கம் பதிலளிக்காவிட்டால் தமது போராட்டமானது வேறு வடிவில் மேற்கொள்ளப்படும் எனவும் எச்சரித்தனர்.

பல்கலைக்கழகங்களில் கல்வி சாரா ஊழியர்கள் நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கைக்குண்டு செயலிழப்பு

நவி



அம்பகஸ்தென்ன பகுதியில் உள்ள வீடொன்றுக்கு அருகில் கற்பாறைக்குள் இருந்து கைக்குண்டு ஒன்றை புதன்கிழமை (17) மதியம் மீட்கப்பட்டுள்ளது.

வீடொன்றை சுற்றி மதில் அமைக்கும் போது, அருகிலிருந்த கற்பாறைக்குள் இருந்தே குறித்த கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது. கைக்குண்டை கண்ட வீட்டின் உரிமையாளர் வெலம்பொட பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறையிட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து புதன்கிழமை (17) இரவு முதல் அந்த இடத்தில் பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டது. வியாழக்கிழமை (18) கண்டி விசேட அதிரடிப்படையின் வெடிப்பொருள் செயலிழக்கும் குழுவினர் வருகை தந்து கைக்குண்டை மீட்டு செயலிழக்க செய்துள்ளனர்.

## நிவாரண பொதிகள் வழங்கி வைப்பு

பாறுக் ஷிஹான்






காரைதீவு பிரதேசத்தில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்துள்ள 300 பயனாளி குடும்பங்களுக்கு புளொட் அமைப்பினால் நிவாரண பொதிகள் வழங்கிவைக்கும் நிகழ்வு புதன்கிழமை (17) இடம்பெற்றுள்ளது.

புளொட் அமைப்பின் அம்பாறை மாவட்ட பொறுப்பாளர் ப.ரவிச்சந்திரன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

மேலும் குறித்த அமைப்பின் ஜேர்மன் கிளையைச் சேர்ந்த தோழர்கள் இவ்வேலைத் திட்டத்துக்கான நிதி பங்களிப்பை மேற்கொண்டிருந்ததுடன், "எமது மக்களின் துன்பத்தில் பங்கெடுப்பவர்களாக நாம் எப்பொழுது உள்ளோம்" என்று ப.ரவிச்சந்திரன் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்துள்ளார்.

### சிறுவர்களுடன் தவறான செயல்:

## கான்ஸ்டபிள் பணி இடைநிறுத்தம்

சிறுமி, சிறுவனை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட வாதுவ பொலிஸில் கடமையாற்றிய கான்ஸ்டபிள் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பாணந்துறை பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பாணந்துறை பதில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் (உதவி பொலிஸ் அத்தியட்சகர்) நிஷாந்த சேனாரத்ன, உதவி பொலிஸ் அத்தியட்சகர் சம்பத் பண்டார அவர்களின் மேற்பார்வையின் கீழ் இவர் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

கொஸ்கொட பிரதேசத்தில் உள்ள தனது இல்லத்திற்கு கடந்த 11ஆம் திகதி சென்ற போது 7 வயது சிறுவனையும் 13 வயது சிறுமியையும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளார்.

இந்த குற்றச்சாட்டின் பேரில் சந்தேகநபரான கான்ஸ்டபிள் கொஸ்கொட பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

## "10 ஆயிரம் பேர் வேலை செய்யக்கூடிய தொழிற்சாலை உருவாக்கும்"

வ.சக்தி



மட்டக்களப்பில் 10,000 பேர் வேலை செய்யக்கூடிய தொழிற்சாலை உருவாக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எருவில் கிழக்குப் பகுதியில் அமைக்கப்படவுள்ள வீதி அபிவிருத்திகளைப் பணிகளை வியாழக்கிழமை (18) பார்வையிட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது மக்கள் இராஜாங்க அமைச்சரிடம் பல கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

"தற்போது அரசாங்கம் முன்னெடுத்துள்ள காத்திரமான நடவடிக்கைகளாலும் பொருளாதாரம் படிப்படியாக மீழெழுற்சி கண்டு வருகின்றது. இவ்வாறான இக்கட்டான சூழலில் நிதியைக் கொண்டு வந்து அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படுத்துவதென்பது சாதாரண விடயமல்ல. ஆனாலும் பலர் விமர்சனங்களை முன்வைக்கலாம் ஆக்கப்பூர்வமான விமர்சனங்களை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயார். ஆனால், விசமத்தனங்களை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை. இதனால் யாருக்கும் எந்தப் பிரயோசனமும் இல்லை.

மட்டக்களப்பு மாவட்டத்திலே 36,000 விதவைத் தாய்மார்கள் உள்ளார்கள், 8,000 மாற்றுத் திறனாளிகள் உள்ளார்கள், 25,000 பேர் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ளார்கள், 8,000 பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ளார்கள் இவ்வாறான நிலையில் இம்மாவட்டத்தில் எந்த தொழிற்சாலையையும் உருவாக்கவில்லை.

நாம் மட்டக்களப்பு மாவட்டத்திலே 10,000 பேர் வேலை செய்யக்கூடிய தொழிற்சாலையை உருவாக்கும் நோக்குடன் தற்போது வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தமது குடும்பத்தினரோடு இம்மாவட்ட மக்கள் இம்மாவட்டத்திலே வாழவேண்டும்.

நாம் உரிமைக்காகவும் அபிவிருத்திக்காகவும் குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். எமக்கு இரண்டும் தேவை. நாம் புதினம் பார்ப்பதற்கு வரவில்லை. எமக்கு உரிமையும் தேவை. அபிவிருத்தியும் தேவை என்பதை மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். மக்களுக்குக் கௌரவமான வாழ்க்கையை நாம் உருவாக்க வேண்டும்.

பிச்சைக்காரக் புண்ணைக் காட்டி காட்டியே பிச்சை எடுப்பான் சிலர், தமிழர்களின் பிரச்சினையைக் காட்டி வாக்கெடுக்கின்றார்கள். இறுதியில் ஒன்றும் நடைபெறப்போவதில்லை. எம்மைப் பொறுத்தவரையில் எமது சமூகத்திற்கு எம்மால் முடிந்த சேவையைச் செய்யவேண்டும் என்பதுதான் எமது நோக்குமாகும்" என தெரிவித்துள்ளார்.

## "உள்ளூர் உற்பத்திகளை அதிகரிப்பதனூடாக சுய பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும்"

சுயதொழில் முயற்சிகளை விருத்தி செய்வதன் ஊடாக உள்ளூர் உற்பத்திகளை அதிகரித்து முயற்சியாளர்களின் சுய பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும் என சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதனூடாக நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் ஒவ்வொரு குடிமகனின் பங்களிப்பு இருப்பதற்கு ஏதுவான நிலைமை உருவாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் வியாழக்கிழமை (18) முற்பகல் சுயதொழில் முயற்சியாளர்களை வலுப்படுத்தும் நோக்கில் கலந்துரையாடலொன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில், சுயதொழில் முயற்சியாளர்கள் தாம் எதிர்நோக்கியுள்ள தொழில்சார் நடைமுறை பிரச்சினைகளையும், வங்கிகள் ஊடக கடன் வசதிகளைப் பெற முற்படும்போது ஏற்படும் இறுக்கமான நடைமுறைகளால் ஏற்படும் அசௌகரியங்கள் குறித்தும் அமைச்சரிடம் சுட்டிக்காட்டியிருந்தனர்.

குறித்த சுயதொழில் முயற்சியாளர்களின் கருத்துக்களில் அவதானம் செலுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, உள்ளூர் உற்பத்திகளை மேம்படுத்துவதற்கான முதலீடுகளை எதிர்பார்க்கின்ற சுயதொழில் முயற்சியாளர்கள் அதற்கான திட்ட முன் மொழிவுகளைச் சமர்ப்பிக்கும் பட்சத்தில் அதற்கான ஒத்துழைப்பினையும் வழிகாட்டல்களையும் வழங்க முடியும் என தெரிவித்துள்ளார்.

அத்துடன், சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் முற்சிகளை ஊக்குவிப்பதற்கு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் இருந்து நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்கான முன்மொழிவுகளையும் வழங்க முடியும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருந்தார்.

குறித்த கலந்துரையாடலில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) மாவட்டச் செயலக பதவி நிலை

உத்தியோகத்தர்கள் துறைசார் அதிகாரிகள், வங்கிகளின் முகாமையாளர்கள், சுயதொழில் முயற்சியாளர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# ஆதரவற்ற ஏராளமான நோயாளிகள் ஆதரவற்ற நிலை ஏற்பட்டது

பொது சுகாதார பரிசோதகர்கள், குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்கள், ஆய்வக உத்தியோகத்தர்கள் மற்றும் பல் தொழில்நுட்ப வல்லுநர்கள் உட்பட சுகாதார சேவையுடன் இணைந்த பத்து தொழிற்சங்கங்கள் ஆரம்பித்த வேலைநிறுத்தம் இரண்டு நாட்களாக வைத்தியசாலை மற்றும் கிளினிக் சேவைகளை முடக்கியது.

வைத்தியசாலையின் சுகாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட இடையூறுகளால் நோயாளர்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகினர். மேலும் சில மருத்துவமனை நடவடிக்கைகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வைத்தியர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவை விட 35,000 ரூபாவால் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து பணிப்புறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

48 மணி நேர வேலைநிறுத்தப் போராட்டத்தால், ஆதரவற்ற ஏராளமான நோயாளிகள் ஆதரவற்ற நிலை ஏற்பட்டது. நாடளாவிய ரீதியில் வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிலையங்களுக்கு சிகிச்சை மற்றும் ஏனைய தேவைகளுக்காக வந்த நோயாளர்கள் உட்பட மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கினர்.

அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற வருபவர்கள் இந்த நாட்டில் உயர் சலுகைகளை அனுபவிக்கும் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற வாய்ப்பு உள்ளவர்கள் யாரும் அரசு மருத்துவமனைக்கு வரமாட்டார்கள். இதன் காரணமாக, சுகாதார சேவை வேலைநிறுத்தங்களால் தினமும் பாதிக்கப்படுபவர்கள் சாதாரண குடும்பங்களே.

வெளியிலிருந்து பரிந்துரைக்கப்படும் மருந்துகளை வாங்க முடியாத மக்கள் மருத்துவமனையில் இருந்து பெற வேண்டிய சிகிச்சை அல்லது மருந்தை இழக்கும் நிலை எவ்வளவு தீவிரமானது? இதனை சுகாதார சேவையின் தொழில்சார் சங்கங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை என நாம் நினைக்கவில்லை. நோயாளிகளிடம் கருணையுடன் நடந்து கொள்ள வேண்டியது மருத்துவமனை ஊழியர்களின் பொறுப்பு என்பதை மறந்துவிடக் கூடாது.

சுகாதாரத் துறை தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கான உரிமையை யாரும் சவால் விடவில்லை. அரச வைத்திய அதிகாரிகள் சங்கமும் சில சந்தர்ப்பங்களில் வேலை நிறுத்தங்களை முன்னெடுத்துச் செல்கின்றது.

சுகாதார சேவையில் உள்ள ஏனைய தொழிற்சங்கங்களுக்கும் வேலை நிறுத்த உரிமை உண்டு என்பதை அங்கீகரிக்க வேண்டும். எனினும், நோய்வாய்ப்பட்ட மக்களைச் சிரமத்திற்கு உள்ளாக்கும் விதத்தில் வேலை நிறுத்தங்களை உடனடியாக நடைமுறைப்படுத்துவது நியாயமில்லை.

இது நாட்டின் சுகாதாரத் துறையில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியது. வைத்தியசாலைகளில் வைத்தியர் பற்றாக்குறை இன்னும் மோசமாகும் பட்சத்தில் இந்த நாட்டின் சுகாதார சேவை பாரிய நெருக்கடிக்குள் தள்ளப்படும் அபாயம் உள்ளது. ஆகையால் பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வுகளைக் கண்டுபிடிப்பதில் அனைவரும் ஆர்வமாக இருக்க வேண்டும்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

கனவு நிலை அழிந்து போய்விடும். நனவு நிலையே இயற்கையான உண்மை நிலை. கனவுகளில் மட்டும் வாழ முடியாது.

பல அறிஞர்கள் தங்கள் எண்ணங்களை நிஜமாக்கினார்கள். அவை அவர்களின் அறிவினாலும் தொடர் முயற்சியாலும் நிறைவேறின. ஆனால் எந்த முயற்சியையும் செய்யாது, கனவுகளை மட்டும் நம்பி வாழ்பவர்களை என்ன செய்வது?

நிழல் எப்படி நிஜமாகும்? எங்களின் நிழல்கூட சிறிது அசைந்தால் மாறிவிடுகின்றது. இருட்டில் ஏது நிழல்? ஒவ்வொரு நாளும் பற்பல கனவுகள், போகாத இடங்களில் பயணம் செய்து சுற்றித் திரிகின்றது.

உண்மையில் மனிதன் வாழவேண்டும். இடையிடையே தோன்றி, மறையும் காட்சிகளில் மயங்கக்கூடாது. இதுவும் ஒரு மாயநிலை.

தேவையற்ற நினைவுகளைத் தூக்கித் தூக்கி எறிக. அதிகமாக ஆசைப்படக் கூடாது. உங்களை நீங்கள் நம்பாமல் எதுவுமே முழுமையாகாது. நிஜவாழ்க்கையில் புகுவதே சுலபமான முன்னேற்றம்...

நன்றி–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

கறுப்பு ஜூலையின் நாற்பதாண்டுகளின் பின் 36:

# இன்னோர் ஒப்பந்தம் தந்த ஏமாற்றம்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

டட்லி-செல்வா ஒப்பந்தத்தைத் தொடர்ந்து தமிழ் மக்களை ஐக்கிய தேசியக் கட்சிக்கு சார்பாக வாக்களிக்குமாறு வழங்கிய மறைமுகமான தூண்டுதல் 1965 முதல் 1980கள் வரை தொடர்ந்தது. 1956 போலன்றி 1960 தேர்தல்களிலும் 1965 தேர்தலிலும் ஐக்கிய தேசியக் கட்சி அணிக்கோ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அணிக்கோ ஏகப் பெரும்பான்மை இருக்கவில்லை. இதையிட்டுத் தமிழரசுக் கட்சி இலங்கையை ஆள்வது எந்தக் கட்சி என்று தீர்மானிப்பது தானே என அகம்பாவத்துடன் பேசவும் முற்பட்டது. இந்த மனநிலை ஏற்படுத்திய சேதம் மிகப்பெரிது.

1965 தேர்தல் முடிவுகள் தனித்த வெற்றியாளரை உருவாக்கவில்லை. ஆனால், அது சிங்கள அரசியலில் ஒரு முக்கியமான அம்சத்தைக் குறித்து நின்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உடைந்து 14 பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சியை விட்டு வெளியேறிய போதிலும், பௌத்த பிக்குகள், பத்திரிக்கைகள், கத்தோலிக்க தேவாலயம், போன்றவர்கள் எல்லோரும் சேர்ந்து சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கு எதிராக ஒன்றுகூடிய போதிலும், பண்டாரநாயக்காவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 30.24% வாக்குகளைப்பெற்று 41 ஆசனங்களைப் பெற்றது. ஐக்கிய தேசியக் கட்சி 38.93% வாக்குகளைப்பெற்று 66 ஆசனங்களைப் பெற்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டணி 55 ஆசனங்களை வென்றதோடு 40% வாக்குகளைப் பெற்றது.

இங்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பெற்ற வாக்குகளும் ஆசனங்களும் முக்கியமானவை. ஏனெனில் 1964இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடனான பேரத்தின் போது 1965 தேர்தலில் இணைந்து பணியாற்றுவது என்று தமிழரசுக் கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமைக்குக் கொடுத்த நம்பிக்கையையும் பின்பு யூ.என்.பி தலைமையுடன் செய்து கொண்ட இரகசிய உடன்படிக்கையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எவ்வாறு நோக்கும் என்பது பற்றிய கணிப்பில் தமிழரசுக் கட்சி பெரும் தவறிழைத்தது.

இந்தப் பின்புலத்திலேயே டட்லி-செல்வா உடன்படிக்கையை நோக்க வேண்டியுள்ளது. ஏனெனில் அரசாங்கத்திற்கு முழுமையான மக்கள் ஆதரவு இல்லை. பெரும்பான்மையற்ற அரசாங்கத்தைத் தலைமையேற்கும் டட்லியால் கூட்டணிக் கட்சிகளின் ஆதரவின்றி எதையும் செய்யமுடியாது. அதேவேளை, ஆளும் அரசாங்கத்திலேயே ஏராளமான இனவாதிகள் இருந்தார்கள். இவ்வாறான ஒரு தேர்தல் முடிவுதான் ஏற்படும் என்பதைப் பலரும் எதிர்வு கூறியிருந்தார்கள். அப்படியிருந்தும் ஒரு உடன்பாட்டின் மூலம் தமிழருக்குத் தீர்வைப் பெறமுடியும் என தமிழரசுக் கட்சி நினைத்தது என்றால் அது அறியாமையா அல்லது அயோக்கியத்தனமா என்பதை வரலாறு முடிவு செய்து விட்டது.

ஏழு கட்சிகளைக் கொண்டு உருவான அரசாங்கத்தில் தமிழரசுக் கட்சிக்கு அமைச்சுப் பதவி ஒன்று வழங்கப்பட உடன்பாடு எட்டப்பட்டது. இங்கு இரண்டு சிக்கல்களைத் தமிழரசுக் கட்சி எதிர்கொண்டது. முதலாவது, தமிழ்க் காங்கிரஸில் இருந்து பிரிந்த நாள் முதல் 'மந்திரிப் பதவிக்காகத் தமிழரைக் காங்கிரஸ் காட்டிக் கொடுத்தது' என்பதே தமிழரசுக் கட்சியின் பிரதான எதிர்ப்பிரசாரக் கோசமாக இருந்தது. இந்நிலையில் அமைச்சுப் பதவியை எப்படி ஏற்பது. இரண்டாவது, கட்சிக்குள் பலருக்கு அமைச்சுப் பதவிக்கு ஆசை இருந்தது. யாருக்குக் கொடுத்தாலும் உட்கட்சிப்பூசல் அதிகரிக்கும்.

எனவே அமைச்சர் பதவியைத் தெரிவு செய்யப்பட்ட எவரும் ஏற்பதில்லை என்று முடிவெடுத்து தமிழ் மக்களால் அறியப்படாதவரானபோதும் செல்வநாயகத்திற்கு மிக நெருக்கமான ஒரு பிரபல கொழும்பு வழக்குரைஞர் என்ற மகத்தான தகுதியின் பேரில் மு.திருச்செல்வம் செனற் சபை உறுப்பினராகி உள்ளூராட்சி அமைச்சரானார். இதன் மூலம், தமிழரசுக் கட்சி அமைச்சர் பதவிக்காக அலையும் கட்சியல்ல என்று மக்களை இன்னும் சில காலம் ஏமாற்றும் வாய்ப்பும் மந்திரிப் பதவியை யார் பெறுவது என்ற மோதலைத் தவிர்க்கும் வசதியும் கிட்டியது.

டட்லி சேனநாயக்க ஆட்சிக்கு வந்தவுடனேயே பௌத்த போயா நாட்களை வார விடுமுறை தினங்களாகவும், சனி மற்றும் ஞாயிறுகளை வேலை நாட்களாகவும் பிரகடனப்படுத்தினார். அரச விவகாரங்களில் பௌத்த நடைமுறைகளை உயர்த்துவதற்கு அரசியல் அதிகாரம் பயன்படுத்தப்படும் என்பதை இது அனைவருக்கும் அடிக்கோடிட்டுக் காட்டியது.

தமிழரசுக் கட்சியினதும் தமிழ்க் காங்கிரஸினதும் ஆதரவைப் பெறுவதற்கான ஒரு சலுகையாக, சேனநாயக்க தமிழ் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட பணி நீக்கம் அறிவிப்புகளை நீக்கியதுடன், உத்தியோகபூர்வ மொழியில் புலமை இல்லாத காரணத்தால் சேவையிலிருந்து ஓய்வு பெறுவதற்கான விருப்பத்தை அவர்களுக்கு வழங்கினார். மேலும் நல்லெண்ணத்தின் நிரூபணமாக, தனது பாரம்பரிய தமிழ் கூட்டாளியான ஜி.ஜி. பொன்னம்பலத்தை 1967இல் ஐ.நாவுக்கான இலங்கைக் குழுவுக்குத் தலைவராக நியமித்தார்.

1966ஆம் ஆண்டு டட்லி சேனநாயக்கவின் அரசாங்கம் 1958ஆம் ஆண்டு 28ஆம் இலக்க தமிழ் மொழி (சிறப்பு ஏற்பாடு) சட்டத்தின் கீழ் ஒழுங்குமுறைகளை வகுத்து வெளியிட்டது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரசாங்க வணிகத்தில் தமிழைப் பயன்படுத்துவதற்கும், அங்குள்ள பொதுப் பதிவுகளைத் தமிழில் பராமரிப்பதற்கும் விதிமுறைகள் வழங்கப்பட்டன. இந்த ஏற்பாடு வடக்கு கிழக்கில் அதிகாரப்பூர்வ கடிதப் பரிமாற்றங்கள், உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகள் போன்றவற்றைத் தமிழில் செயற்படுத்த அனுமதித்தன. வெளியிடப்படும் அனைத்து சட்டங்கள், துணை விதிகள் மற்றும் ஆணைகள் மற்றும் அதிகாரப்பூர்வ வெளியீடுகளைத் தமிழ் மொழியில் வெளியிட அனுமதித்தன.

இலங்கைத் தமிழர்களில் கால் பகுதியினர், தமிழ் பேசும் முஸ்லிம்களில் பெரும்பாலோர் மற்றும் அனைத்து இந்தியத் தமிழர்களும் வாழ்ந்த மற்றும் பணிபுரியும் வடக்கு மற்றும் கிழக்கிற்கு வெளியே தமிழைப் பயன்படுத்துவது குறித்து இந்த சட்ட ஏற்பாடானது அமைதியாக இருந்தது. வடக்கு, கிழக்கு வெளியேயான தமிழ்மொழி உரிமை குறித்து எவ்வித சட்ட ஏற்பாடுகளும் இருக்கவில்லை. இதற்கு இரண்டு காரணங்கள். முதலாவது, தமிழரசுக் கட்சி இது குறித்து அக்கறை காட்டவில்லை. இரண்டாவது அரசாங்கத்தைப் பொறுத்தவரை 'சிங்களம் மட்டுமே' வெற்றிபெற வேண்டும், சிங்களமல்லாதவர்கள் சிங்களம் கற்க வேண்டும்.

டட்லி-செல்வா உடன்படிக்கையில் 'தமிழ் பேசும் நபர் ஒருவருக்குத் தீவு முழுவதும் தமிழில் வர்த்தகம் செய்ய உரிமை இருக்க வேண்டும்' என்று கூறப்பட்டிருந்த போதிலும், அதுகுறித்து அரசாங்கமும் தமிழரசுக் கட்சியும் மௌனம் காத்தன. உடன்படிக்கையில் ஒப்புக் கொள்ளப்பட்டபடி வடக்கு மற்றும் கிழக்கில் நீதிமன்ற நடவடிக்கைகளில் தமிழ் மொழியைப் பயன்படுத்துவது தொடர்பான எந்த விதியும் 1966இல் கொண்டுவரப்பட்ட ஒழுங்குமுறையில் இல்லை.

இந்த உடன்படிக்கை உருவானதில் இருந்து, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அதன் கூட்டாளிகளும் உடன்படிக்கையின் ஏற்பாடுகள் என்ன வடிவத்தில் அமையும் என்பதைப் பார்க்க ஆவலாயிருந்தனர். டட்லி அவற்றை நடைமுறைப்படுத்த முயன்றால், அவருடைய ஆபத்தான 'தேசிய' அரசாங்கம் வீழ்ச்சியடையக்கூடும் என்று அவர்களுக்குத் தெரியும். டட்லி இந்த முடக்கப்பட்ட மற்றும் நடைமுறையில் பயனற்ற இந்த ஏற்பாடுகளுக்குக் கூட செயல்வடிவம் கொடுத்தால் அவருக்கு என்ன காத்திருக்கிறது என்பதையும் நன்கு அறிந்திருந்தார்.

இப்பின்னணியில் 1966ஆம் ஆண்டின் தமிழ் மொழி ஒழுங்குமுறையின் வலுவில்லாத விதிகளை நடைமுறைப்படுத்தினார். இருப்பினும் டட்லி தனது எதிரிகளை வெற்றிகரமான முறையில் வெளியேற்றவில்லை என்பதை அறிந்திருந்தார். இது தமிழ் மக்கள் மற்றும் அவர்களின் உரிமைகள் பற்றிய பிரச்சினை அல்ல, மாறாக ஒரு அதிகாரப் போட்டியும் மக்களை இருட்டில் வைத்திருக்கும் பிரசாரமும் ஆகும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் கூட்டணி, டட்லியால் கொண்டுவரப்பட்ட விதிமுறைகள் தமிழர் ஆதரவைப் பெறுவதற்காக விற்கப்பட்டவை என்றும் முக்கியமான 1958 சட்டத்திற்கு எதிரான திட்டமிட்ட காட்டிக்கொடுப்பு என்றும் அறிவித்தது. இந்தச் சிறுபொறி மெதுவாக புகைய ஆரம்பித்தது.

முதல் நடவடிக்கையாகப் பாராளுமன்ற கட்டிடம் நோக்கி சில பிக்குகளால் ஏற்பாடு செய்யப்பட்ட தலைவர் இல்லாத ஊர்வலத்திற்கு எதிர்க்கட்சி அழைப்பு விடுத்தது. ஆர்ப்பாட்டக்காரர்கள் வழியில் கல்லெறிந்தும் கடைகளை உடைத்தும் வன்முறையில் ஈடுபட காவல்துறை நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒரு பிக்கு கொல்லப்பட்டார்.

எதிர்த்தரப்பினர் அரசாங்கத்தின் செயல்கள் சிங்கள பௌத்தர்களுக்குச் செய்யும் துரோகம் என்றும் தமிழர்களுக்கான சலுகை என்றும் தொடர்ந்து தாக்கினர். நீண்ட கால விளைவுகளுக்கு அஞ்சி, டட்லி சேனநாயக்க, விதிமுறைகளை நடைமுறைப்படுத்த மறுத்துவிட்டார். இதன் மூலம், 1958 தமிழ் மொழி (சிறப்பு ஏற்பாடு) சட்டமும், அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிமுறைகளும், எட்டு ஆண்டுகளுக்குப் பிறகும், பயனற்ற வெற்றுக் காகிதங்களாகவே கிடந்தன.

## கடிதங்கள்

### மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கவும்



தலவாக்கலை நகரிலிருந்து நுவரெலியா வீதியில் மல்லியப்பு வரையான வீதியின் இருபுறமும் அமைந்துள்ள வடிகாலமைப்பின் கொங்ரீட் மூடிகள் சில இடங்களில் உடைந்து, வடிகான்கள் திறந்த நிலையில் காணப்படுவதாக பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இரண்டு பாடசாலைகள், கால்நடை வைத்திய அலுவலகம், கூட்டுறவுச் சங்கம், சமுர்த்தி அலுவலகம், லங்கா சதொச நிறுவனம், பிரதேச செயலகம், அரச மற்றும் தனியார் வங்கிகள் பல உட்பட பல கடை தொகுதிகள் காணப்படுகின்றன.

இந்த வீதியின் இருமருங்குகளிலும் உள்ள நடை பாதைகளை அதிகமானோர் தினந்தோறும் பயன்படுத்தி வருவதாக நகரவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இருபுறங்களிலும் காணப்படுகின்ற வடிகாலமைப்பின் ஊடாக கழிவு நீர் செல்கின்றது. வடிகாலமைப்பின் மேலே மூடப்படும் சில மூடிகள் உடைந்து காணப்படுகின்றமையால் அவ்வழியே பயணிக்கும்போது, மக்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் இதர தொழில்களுக்கு செல்வோர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே, வடிகான்களை மூட சந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென தலவாக்கலை பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

–பி.கேதீஸ்

# SLT-MOBITEL 'Life at 300Mpbs' அறிமுகம்


2024ஆம் ஆண்டை வரவேற்கும் வகையில், SLT-MOBITEL இனால் தனது Fibre-to-the-Home (FTTH) பாவனையாளர்களுக்கு 'Life at 300 Mbps' சலுகை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. ஜனவரி 1ஆம் திகதி முதல் தமது ஃபைபர் இணைப்புகளின் வேகத்தை மேம்படுத்தி, டிஜிட்டல் புரட்சியை வழங்கியுள்ளதுடன், அதிவேகமான இணையத்தள பாவனைக்கான அதிகரித்துச் செல்லும் கேள்வியை நிவர்த்தி செய்வதாகவும் அமைந்துள்ளது.

ஒப்பற்ற, சிறந்த பாவனையாளர் அனுபவங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கும் வகையிலும், எதிர்காலத்தை கவனத்தில் கொண்டும் மேற்கொள்ளப்பட்டுள்ள வேக அதிகரிப்பானது மாதாந்த வாடகை பக்கேஜ்களை கொண்டுள்ள ஏற்கனவே காணப்படும் சகல ஃபைபர் பாவனையாளர்களுக்கும், புதிய வாடிக்கையாளர்களுக்கும் சுயமாக பொருத்தமானதாக அமையும். அதிவேக புரோட்பான்ட் வேகங்கள் மற்றும் 150Mbps அப்லோட் வேகத்தை வழங்கும் 'Life at 300Mbps' இன் அனுகூலத்தைப் பெறுவதற்கு, வாடிக்கையாளர்கள் எவ்விதமான மேலதிக கட்டணங்களையும் செலுத்த வேண்டியதில்லை அல்லது தமது பிளான்களை மாற்றிக் கொள்ள வேண்டியதில்லை. பெருமளவு பயன்படுத்தப்படும் நேரங்களிலும், உயர் தரம் வாய்ந்த இணைய இணைப்பை உறுதி செய்வதற்கு புதிய கொள்ளளவு மேம்படுத்தல்களில் SLT-MOBITEL முதலீடுகளை மேற்கொண்டுள்ளது.

புதிய SLT-MOBITEL ஃபைபர் வாடிக்கையாளர்களுக்கு பெறுமதி வாய்ந்த அன்பளிப்புகள் காத்திருப்பதுடன், அதில் நாளாந்த வாழ்க்கையில் ஒவ்வொரு அம்சத்திலும் தாக்கம் செலுத்தக்கூடிய புரட்சிகரமான அதி-வேக இணையமும் அடங்கியுள்ளது.

டிஜிட்டல் உலகம் என்பது டேட்டா அடிப்படையில் இயங்கும் அப்ளிகேஷன்களை செயற்படுத்த, உயர் இணைய வேகத்துக்கான தேவையை கொண்டுள்ளது என்பதை SLT-MOBITEL புரிந்து கொண்டுள்ளது. தொழில்நுட்பம் மேம்படுத்தப்படும் நிலையில், பாவனையாளர்கள் உயர் பான்ட்வித் வசதிக்கான தேவையை கொண்டிருப்பதுடன், அதனூடாக டேட்டா அடிப்படையிலான அப்ளிகேஷன்களை உள்வாங்கக்கூடியதாக இருக்கும். வாடிக்கையாளர்களை நோக்காகக் கொண்ட வர்த்தக நாமம் எனும் வகையில் SLT-MOBITEL 'Life at 300Mbps' இனூடாக ஃபைபர் பாவனையாளர்களுக்கு புத்தாண்டில் எதிர்காலத்துக்கு உகந்த இணைப்புத்திறனை பெற்றுக் கொடுத்து, அதனூடாக அவர்களின் மேம்படும் டிஜிட்டல் வாழ்க்கை முறை தேவைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கு பங்களிப்பு வழங்க முன்வந்துள்ளது.

மூன்று மடங்கு வேக மேம்படுத்தலினூடாக, SLT-MOBITEL இன் ஃபைபர் வாடிக்கையாளர்களுக்கு வேகமான மற்றும் அதிகளவு தங்குதிறனுடன் கூடிய இணைப்புத்திறனை அனுபவிக்க முடியும் என்பதுடன், streaming, surfing, gaming, downloading மற்றும் high-bandwidth online செயற்பாடுகள் போன்றவற்றை அனுபவிக்கக்கூடியதாக இருக்கும்.





புரோட்பான்ட் வேக மேம்படுத்தலினூடாக மிருதுவான HD ஸ்ட்ரீம் செய்யும் வசதி, தடங்கலில்லாத பாரிய டவுன்லோட்கள், low-latency ஒன்லைன் கேமிங்கள், glitch-free வீடியோ அழைப்புகள் மற்றும் மெய்நிகர் சந்திப்புகள் போன்றன வழங்கப்படுவதுடன், பாவனையாளரின் டிஜிட்டல் அனுபவங்களை மேம்படுத்தி, மிருதுவான மற்றும் அதிகளவு அனுபவித்து மகிழக்கூடிய பயணத்தை வழங்குகின்றது. பாவனையாளர்களுக்கு ஒப்பற்ற வகையில் பொருளடக்கங்களை அனுபவிக்க முடிவதுடன், அசல் நேர செயற்பாடுகளினூடாக ஒன்லைன் நடவடிக்கைகளில் ஈடுபடல் மற்றும் டிஜிட்டல் பகுதியில் போட்டிகரமான முன்னேற்றத்தை எய்தல் போன்றவற்றை பெற்றுக் கொள்ள முடியும்.

நவீன சேவைகளை வழங்குவதில் SLT-MOBITEL காண்பிக்கும் அர்ப்பணிப்பு, இணையக் கேள்வியை பூர்த்தி செய்வதில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. 300Mbps வரை ஃபைபர் வேகம் மேம்படுத்தப்பட்டுள்ள நிலையில், உயர் வினைத்திறனான இணைத்தீர்வுகளை வழங்குவதில் SLT-MOBITEL முன்னோடியாக திகழ்கின்றதுடன், பாவனையாளர்களை டிஜிட்டல் யுகத்தில் இணைப்பில் இருக்கவும், களிப்பூட்டப்படுவதையும், உற்பத்தித்திறனுடன் திகழ்வதற்கும் உதவுகின்றது.

# eSlip பயன்பாட்டை கொமர்ஷல் வங்கி மேம்படுத்துகின்றது

கொமர்ஷல் வங்கி தனது 'eSlip' செயலியில் புதிய அம்சங்களை வெளியிட்டுள்ளது. இலங்கையில் இவ்வகையான பயன்பாட்டைக் கொண்ட முதல் செயலி இதுவாகும்.

டிஜிட்டல் வங்கியிச் சேவையின் மூலம் நிலைபெறுதகு தன்மையை மேம்படுத்தும் நோக்கில், eSlip செயலியானது வாடிக்கையாளர்களுக்கு கிளைக்குச் செல்லும் போது இலத்திரனியல் முறையில் வைப்பு படிவத்தை தொலைபேசியில் பூர்த்தி செய்வதன் மூலம் பண வைப்பு செயல்முறையை சீரமைக்க உதவுகிறது. வங்கிக்கு சென்றவுடன், வாடிக்கையாளர்கள் தங்கள் சொந்த கணக்குகள் அல்லது மற்ற கொமர்ஷல் வங்கி வாடிக்கையாளர்களின் கணக்குகளில் பணத்தை வைப்பதற்கு நேரடியாக பணம் வைப்பு செய்யும் கவுண்டருக்கு செல்லலாம்.




இந்த சமீபத்திய மேம்படுத்தலில் செயல்படுத்தப்பட்ட புதிய அம்சங்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் கவுன்டர் ஊழியர்களுக்கு வசதியை மேம்படுத்தி, புதுமையான பசுமை-எதிர்கால முன்முயற்சியில் இணைக்கும் வகையில், வங்கியில் பணம் வைப்புச் செய்வதை வேகமாகவும் எளிதாகவும் முன்னெடுக்க உதவுவதாக வங்கி தெரிவித்துள்ளது.

ஒரு புதிய அடையாள (ID) ஆவணச் சரிபார்ப்பு அம்சமானது, ஒரு வாடிக்கையாளர் ஏற்கனவே வங்கியுடன் உறவை பேணுகின்றாரா என்பதைச் அறிந்துகொள்ள, தேசிய அடையாள அட்டை இலக்கங்களை சரிபார்க்க இந்த செயலி இயக்கப்படுகிறது. இருப்பினும், இந்த செயலியைப் பயன்படுத்த, கொமர்ஷல் வங்கியில் கணக்கைப் பராமரிக்கவேண்டிய அவசியமில்லை.

ஒரு 'eSlip Groups' அம்சத்தின் அறிமுகம், செயலியின் பயனர்கள் ஒரு QR குறியீட்டின் கீழ் 10 eSlips வரையிலான குழுக்களை உருவாக்குவதை சாத்தியமாக்குகிறது. ஒரே QR குறியீட்டின் கீழ் பல கணக்குகளுக்கு வைப்புச் செய்ய வேண்டிய வாடிக்கையாளர்களுக்கு இந்த அம்சம் வசதியளிப்பதாக வங்கி தெரிவித்துள்ளது.

மற்றொரு புதிய அம்சம், eSlip பயனர்கள் முடிக்கப்பட்ட அனைத்து eSlip பரிவர்த்தனைகளின் PDF பற்றுச்சீட்டுக்களை உருவாக்கி அவற்றை மொபைல் சாதனம் ஆதரிக்கும் சமூக ஊடக தளங்களான WhatsApp, Email மற்றும் Viber போன்றவற்றில் பகிர்ந்து கொள்ள உதவுகிறது.



## நியாயப்படுத்தும் வன்முறை

உரிமையின் பெயரால்
உறவின், நட்பின் பெயரால்
மதத்தின், இனத்தின் பெயரால்
சாதியின் பெயரால்
தமக்கே உரித்தான அரசியலின் பெயரால்
வலிமையுடைய ஒரு சாரார்
எளியோரைக் காயப்படுத்திய வண்ணமே
தம் இருப்பை உறுதிசெய்வர்
அவ்வப்போது
தம்மை நியாயப்படுத்தி
நியாயப்படுத்தி...

வலிகளை உணராதோரின்
நியாயப்படுத்தும் வன்முறை
எல்லாக் குற்றங்களை விடவும்
மிகக் கொடூரமானது
துயரமானது
பாரமானது இப்பூமிக்கு...

– பாலையூற்று அஷ்ரபா நூர்தீன்



## மகாவலி....

எங்கோ பெய்த பெருமழைக்கு
என்னூரும் மூழ்கியது
பெருவெள்ளத்தில்!

அத்தையும் மாமனும்
உறங்கையில்
நத்தையும் பாம்பும்.
வந்ததென்ன?

கொட்டடியில் ஆசையாய்
வளர்த்த
கோழிக் குஞ்சுகளும்
அள்ளுண்டுபோனதென்ன?

காடு கரப்பை வெட்டி
அல்லும்பகலும் உழைத்து
நட்டுவைத்தெல்லாம்...


நாட்டுச்சோளனும் நிலத்தடி
கச்சானும்
நட்டென நிக்கும்போதே
நட்டமாய்ப்போனதேன்ன...

ஆடும் மாடும் வெறும்வாயை
மெல்ல குட்டியெல்லாம்
வெள்ளத்தோடுபோனதென்ன?

நட்ட ஈடு தரப்படுமென்று
நாலப்பக்கம் செய்திவந்தும்
கிடைப்பதென்ன?

அணைகட்ட வக்கில்லாத
அரசுக்கு
மணல் கொள்ளையில்.
பெரும்பங்கு!

-ஜெயபிரகாஷ்
திருகோணமலை





## வாட்டுதே என்னை

ஏதோ ஒரு நினைவு
என் நாளும் எனக்குள்
மாறாத வடுவாக தினம்
என்னை வாட்டுதே...


உன் ஓரப்பார்வையோ...!
உன் மெல்லிய புன்னகையோ ...!
உன் மெல் நடையோ ...!
உன் கொடி இடையோ...!
உன் கருங்கூந்தலோ ...!
உன் முழு மேனியோ...!
மொத்தத்தில் நீ என்
முழு நிலவோ...?

தேனாக பாயும்
உன் வார்த்தையோ...!
ஆழமாய் நீ வைத்த
பேரன்போ...!
மோகமாய் நீ கொண்ட
காதலோ...!

என்னவென்று புரியாது
எந்நாளும் புலம்புகிறேன்
இந்நாளும் புரியாது இனியவளே
உன் நினைவில் தொடர்கிறேன்...

- றொபின்சியா பிரான்ஸ்





## மாலை மங்கும் நேரம்

மங்கும் மாலை வேளை
மனதிலே ஒரு வித தயக்கம்
குஞ்சோடு பறவை - தன்
கூட்டுக்குத் திரும்புது

கடற்கரை மணலிலே
காந்தை அவள் காத்திருந்தாள்
மாறன் வரவை எண்ணி
மனதில் நினைத்திருந்தாள்

காத்திருந்த கண்ணிரெண்டும்
கலங்கி வாடுதே
கடல் அலைகள் தலை குனிய
நினைவு அலைகள் முட்டி மோத

ஆசையாய்க் குழைந்திட
அவன் வருவானா?
மாது அவளை அணைத்து
மகிழ வைப்பானா?

- ( மழைக்குருவி )
-மனோஜா இரத்தினகுமார்



சீனா

# இறப்பு விகிதம் அதிகரிப்பு

சீனாவில் மக்கள் தொகையை குறைக்க ஒரு குழந்தை திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதனால் மக்கள் தொகை கணிசமாக குறைந்த நிலையில், 2016ஆம் ஆண்டில் ஒரு குழந்தை கொள்கையை சீன அரசு தளர்த்தியது. இதில் ஓரளவுக்கு பலன் கிடைத்தபோதும், பிறப்பு விகிதம் எதிர்பார்த்த அளவிற்கு உயரவில்லை. இதனால் தம்பதிகள் மூன்று குழந்தைகள் வரை பெற அரசு அனுமதி வழங்கியது. இருந்தபோதும் கடந்த சில ஆண்டுகளாகவே பிறப்பு விகிதம் வரலாறு காணாத அளவிற்கு சரிந்துள்ளது. அதேசமயம் இறப்பு விகிதம் உயர்ந்து வருகிறது.



60 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு 2022இல் சீன மக்கள் தொகை குறைந்தது. கடந்த ஆண்டிலும் (2023) மக்கள் தொகை 2 மில்லியன் அளவுக்கு குறைந்தது. சீனாவில் தற்போது 1.4 பில்லியன் மக்கள் உள்ளதாகவும் தேசிய புள்ளியியல் துறை தெரிவித்துள்ளது.

கொரோனா கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட பிறகு இரண்டாவது ஆண்டாக இறப்பு விகிதம் உயர்ந்து, பிறப்பு விகிதம் குறைந்திருப்பதால், மொத்த மக்கள் தொகையில் 2 மில்லியன் குறைந்ததாக தேசிய புள்ளியியல் துறை தெரிவித்துள்ளது.

சீனாவில் இந்த நிலை தொடர்ந்தால் எதிர்காலத்தில் வயதானவர்கள் அதிகளவில் இருப்பார்கள். பிறப்பு விகிதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியானது சீனாவிற்கு நீண்டகால பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கு சவாலாக உள்ளது. காலப்போக்கில் பொருளாதார வளர்ச்சியை மந்தமாக்கும் என்று கூறப்படுகிறது.

உலகிலேயே அதிக மக்கள்தொகை கொண்ட நாடாக இருந்த சீனா, கடந்த ஆண்டு இரண்டாவது இடத்திற்கு சென்றது குறிப்பிடத்தக்கது.

காஷ்மீர்

கடும் குளிர் எதிரொலி

## உறைந்து கிடக்கும் தால் ஏரி



வடமாநிலங்களில் தற்போது கடும் குளிர் நிலவி வருகிறது. இதனால் தலைநகர் புதுடெல்லி உட்பட பல்வேறு மாநிலங்களில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு வருகிறது.

காஷ்மீரின் ஸ்ரீநகரில் தால் ஏரி (Dal Lake) அமைந்துள்ளது. உலகளவில் பிரபலமான இந்த ஏரி, சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கம் ஆகும். அதனால்தான் இந்த ஏரி, காஷ்மீர் மகுடத்தின் வைரக்கல் என போற்றப்படுகிறது.

இந்நிலையில், இத்தகைய சிறப்பு வாய்ந்த தால் ஏரியின் சில பகுதிகள் உறைந்து காணப்படுகிறது.

பாகிஸ்தான்




## ஈரான் தூதர் வெளியேற்றம்

பாகிஸ்தான் மீது ஈரான் நடத்திய ஏவுகணைத் தாக்குதலை அடுத்து, அந்நாட்டு தூதரை பாகிஸ்தான் வெளியேற்றியுள்ளது. இது தொடர்பாக இஸ்லாமாபாத்தில் செய்தியாளர்களிடம் பேசிய பாகிஸ்தான் வெளியுறவு செய்தித் தொடர்பாளர் மும்தாஜ் ஜாரா பலூச், "ஈரானில் உள்ள தனது தூதரை திரும்பப் பெற்றுக்கொள்ள பாகிஸ்தான் முடிவு செய்துள்ளது. பாகிஸ்தானுக்கான ஈரான் தூதர் தற்போது தனது நாட்டுக்கு சென்றுள்ளார். தற்போதைக்கு அவர் பாகிஸ்தானுக்கு வர மாட்டார்" என தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் மீது ஈரான் செவ்வாய்க்கிழமை (16) ஏவுகணை தாக்குதல் நடத்தியது. பாகிஸ்தானில் உள்ள ஜெய்ஷ் அல்-அட்ல் (Jaish al-Adl) என்ற அமைப்பை குறிவைத்து இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக ஈரான் நாட்டு அரசு ஊடகம் தெரிவித்தது.

சன்னி இஸ்லாமிய பிரிவைச் சேர்ந்த இந்த அமைப்பு, ஈரானின் சிஸ்டன் பலுசிஸ்தான் மாகாணத்தில் அடிக்கடி தாக்குதல்களை நடத்தி வருவதாக ஈரான் குற்றஞ்சாட்டி உள்ளது. குறிப்பாக, பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் படையினரை குறிவைத்து ஜெய்ஷ் அல்-அட்ல் தாக்குதல் நடத்துவதாக அந்நாடு தெரிவித்துள்ளது. இதன் காரணமாக அந்த அமைப்பை குறிவைத்து ஈரான் தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம், "பாகிஸ்தான் நாட்டின் வான்வெளியில் ஈரான் அத்துமீறி நுழைந்து நடத்திய தாக்குதலில் இரண்டு குழந்தைகள் உயிரிழந்துள்ளனர். மூன்று சிறுமிகள் காயமடைந்துள்ளனர். இதை ஏற்றுக்கொள்ளவே முடியாது.

தீவிரவாதம் பொதுவான அச்சுறுத்தல் என பாகிஸ்தான் சொல்லி வருகிறது. அதைத் தடுக்க ஒருங்கிணைந்த நடவடிக்கை தேவை. இந்த மாதிரியான தாக்குதல்கள் அண்டை நாடுகளில் நம்பிக்கையை பாழாக்கும். தூதரக ரீதியாக பிரச்சினையை அணுக பல்வேறு வாய்ப்புகள் உள்ளபோது, ஈரான் தேர்ந்தெடுத்த வழி மிகவும் தவறானது" என குறிப்பிட்டுள்ளது.

உத்தரப் பிரதேசம்

## 'ராம்' என பெயரிடப்பட்டவர்களுக்கு சிறப்பு சலுகை



உத்தரப் பிரதேசம் மாநிலம், வரும் ஜனவரி 22 ஆம் திகதி அயோத்தியில் ராமர் கோவிலின் கும்பாபிஷேக நிகழ்வுக்கு முன்னதாக, கோரக்பூர் உயிரியல் பூங்காவில் 'ராம்' என்று பெயரிடப்பட்ட பார்வையாளர்களுக்கு தங்களின் நுழைவு டிக்கெட் கட்டணத்தில் 50 சதவீதம் தள்ளுபடி வழங்கப்படும் என்று பூங்கா நிறுவனம் முடிவு செய்துள்ளது.

தள்ளுபடி பெறும் பார்வையாளர்கள் அடையாள ஆவணங்களைக் காட்ட வேண்டும் என்று மிருகக்காட்சிசாலையின் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

ஷாஹீத் அஷ்ஃபாக் உல்லா கான் பிராணி உத்யானின் இயக்குனர் மனோஜ் குமார் சுக்லா "இந்த சலுகை ஜனவரி 21ம் திகதி அன்று ஒரு நாள் மட்டுமே கிடைக்கும்" என தெரிவித்துள்ளார்.

மேலும், மிருகக்காட்சிசாலைக்கு வாரந்தோறும் திங்கட்கிழமை விடுமுறை அளிக்கப்பட்டாலும், மிருகக்காட்சிசாலையின் நுழைவு மண்டபத்தில் கும்பாபிஷேக விழாவை நேரடி ஒளிபரப்பு செய்ய சுக்லா முடிவு செய்துள்ளார். நுழைவு பிளாசாவில் உள்ள நிகழ்ச்சி மண்டபத்தின் நுழைவு அன்றைய தினம் பொது மக்களுக்கு திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உத்தர பிரதேசம்

பட்டாசு ஆலையில் வெடி விபத்து

## அயோத்தியில் ஏற்றப்பட்ட 108 அடி நீள ஊதுவத்தி



உத்தர பிரதேச மாநிலம் அயோத்தியில், வரும் 22-ம் திகதி ராமர் கோவில் கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு கோவிலுக்கு ஏராளமானோர் பரிசு பொருட்கள் மற்றும் காணிக்கைகளை அனுப்பியுள்ளனர்.

அவ்வகையில் குஜராத்தின் வதோதரா நகரில் தயாரிக்கப்பட்ட 108 அடி நீள ஊதுவத்தி அயோத்திக்கு அனுப்பி வைக்கப்பட்டது. 3,610 கிலோ கிராம் எடையும், மூன்றரை அடி சுற்றளவும் கொண்ட இந்த வாசனை ஊதுவத்தி ஏற்றப்பட்டது. இதன்மூலம் அயோத்தியில் நறுமணம் பரவத் தொடங்கியது.

ஊதுவத்தியை ஏற்றியபோது பக்தர்கள் ஜெய் ஸ்ரீ ராம் என முழக்கம் எழுப்பினர். இந்த ஊதுவத்தியில் இருந்து 50 கிலோ மீட்டர் தூரம் வரை வாசனை வீசும் என்று கூறப்படுகிறது. இந்த ஊதுவத்தி முழுவதும் எரிய ஒன்றரை மாதம் ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




# ஆப்கானிஸ்தானை வெள்ளையடித்த இந்தியா

இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரில் ஆப்கானிஸ்தானை இந்தியா வெள்ளையடித்தது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளையும் ஏற்கெனவே வென்ற இந்தியா, பெங்களூருவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற மூன்றாவது போட்டியையும் இரண்டாவது சுப்பர் ஓவரில் வென்றதன் மூலம் 3-0 என ஆப்கானிஸ்தானை வெள்ளையடித்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இந்தியா

இந்தியா: 212/4 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: றோஹித் ஷர்மா ஆ.இ 121 (69), ரிங்கு சிங் ஆ.இ 69 (39) ஓட்டங்கள். பந்துவீச்சு: பரீட் அஹ்மட் 3/20 [4], குவைஸ் அஹ்மட் 0/28 [4])

ஆப்கானிஸ்தான்: 212/6 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: குல்படின் நைப் ஆ.இ 55 (23), ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ் 50 (32), இப்ராஹிம் ஸட்ரான் 50 (41), மொஹமட் நபி 34 (16) ஓட்டங்கள். பந்துவீச்சு: வொஷிங்டன் சுந்தர் 3/18 [3])

முதலாவது சுப்பர் ஓவர்:

ஆப்கானிஸ்தான்: 16/1 (1 ஓவ. ) (துடுப்பாட்டம்: மொஹமட் நபி ஆ.இ 7 (3), ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ் ஆ.இ 5 (2). பந்துவீச்சு: முகேஷ் குமார்: 1/16)

இந்தியா: 16/0 (1 ஓவ.) (துடுப்பாட்டம்: றோஹித் ஷர்மா ஆ.இ 12 (3) ஓட்டங்கள். பந்துவீச்சு: அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய் 0/16)

இரண்டாவது சுப்பர் ஓவர்:

இந்தியா: 11/2 (0.5 ஓவ.) (துடுப்பாட்டம்: றோஹித் ஷர்மா 11 (3) ஓட்டங்கள். பந்துவீச்சு: பரீட் அஹ்மட் 1/11)

ஆப்கானிஸ்தான்: (0.3 ஓவ.) (பந்துவீச்சு: ரவி பிஷ்னோய்)

போட்டியின் நாயகன்: றோஹித் ஷர்மா

தொடரின் நாயகன்: ஷிவம் டுபே

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான முதலாவது டெஸ்டில்

## ஆதிக்கம் செலுத்தும் அவுஸ்திரேலியா



மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான முதலாவது டெஸ்டில் அவுஸ்திரேலியா ஆதிக்கம் செலுத்துகிறது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், அடிலெய்ட்டில் நேற்று முன்தினம் ஆரம்பமான இப்போட்டியின் நேற்றைய நாளை தமது முதலாவது இனிங்ஸில் 2 விக்கெட்டுகளை இழந்து 59 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த அவுஸ்திரேலியா, குறிப்பிட்ட இடைவெளிகளில் விக்கெட்டுகளை இழந்தபோதும் ட்ரெவிஸ் ஹெட்டின் 119, உஸ்மான் கவாஜாவின் 45 ஓட்டங்களோடு சகல விக்கெட்டுகளையும் இழந்து 283 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், ஷமர் ஜோசப் 5, ஜஸ்டின் கிறேவ்ஸ் 2, கேமார் றோச் 2, அல்ஸாரி ஜோசப் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.


பதிலுக்கு தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் மேற்கிந்தியத் தீவுகள், நேற்றைய இரண்டாம் நாள் முடிவில் ஜொஷ் ஹேசில்வூட் (4), கமரோன் கிறீன், நேதன் லையனிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 6 விக்கெட்டுகளை இழந்து 73 ஓட்டங்களைப் பெற்று 22 ஓட்டங்கள் பின்தங்கியுள்ளது. களத்தில் ஜோஷுவா டா சில்வா 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதுள்ளார்.



## 'வீரர்களின் நம்பிக்கையிழந்தால் பைகளுடன் செல்வேன்'

தன்னில் தனது வீரர்கள் நம்பிக்கையிழந்தால் தான் தனது பைகளை எடுத்துக் கொண்டு செல்வேன் என ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவின் முகாமையாளர் ஸ்கெவி தெரிவித்துள்ளார்.

வைரியான றியல் மட்ரிட்டிடம் சுப்பர் கிண்ண இறுதிப் போட்டியில் தோல்வியடைந்த பார்சிலோனா, லா லிகா புள்ளிகள் பட்டியலில் நான்காமிடத்திலுள்ளது.




## பிலிப்ஸை கைச்சாத்திட ஆர்வமாயிருக்கும் கழகங்கள்

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் மத்தியகளவீரரான கல்வின் பிலிப்ஸைக் கைச்சாத்திட ஸ்பானிய லா லிகா கழகங்களான அத்லெட்டிகோ மட்ரிட், பார்சிலோனா உள்ளிட்ட ஆறு கழகங்கள் ஆர்வம் காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் 28 வயதான பிலிப்ஸின் எதிர்காலம் அடுத்த வாரத்தில் முடிவாகுமெனக் கூறப்படுகிறது.

## பார்சிலோனா செல்லும் ஜெஸி லிங்கார்ட்?



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான நொட்டிங்ஹாம் பொரெஸ்டின் முன்னாள் முன்களவீரரான ஜெஸி லிங்கார்ட்டைக் கைச்சாத்திடுவதில் ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனா ஆர்வம் காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னரும் 31 வயதான லிங்கார்ட்டைக் கைச்சாத்திடுவதில் பார்சிலோனா ஆர்வம் காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 19 ஜனவரி 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.